# காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி

# மேடவாக்கம், சென்னை

## வினா வங்கி விடைகள்

## முதலாமாண்டு

1. நளவெண்பாவின் ஆசிரியர் யார்?
   புகழேந்திப் புலவர்
2. ‘அறிவிழந்து சூதாடி நாடிழந்த மன்னன் என்போல் உண்டோ’ என்று வருந்திய தருமனுக்கு நளன் கதையைக் கூறியது யார்?
   வியாசர்
3. நளவெண்பா எத்தனைக் காண்டங்களை கொண்டது?
   மூன்று.அவை, சுயம்வரக்காண்டம், கலித்தொடர் காண்டம், கலிநீங்கு காண்டம்.
4. நளவெண்பா தோன்றுவதற்கு முதல் நூல் எது?
   நளோபாக்யானம்
5. சீறாப்புராணத்தின் ஆசிரியர் யார்?
   உமறுப்புலவர்
6. சீறா என்றால் என்ன?
   ஸீரத் என்னும் அரபு சொல்லிற்கு வாழ்க்கை வரலாறு என்பது பொருள்.
7. யாருடைய வேண்டுகோளுக்கிணங்க உமறுப்புலவர் சீறாப்புராணத்தை எழுதினார்?
   வள்ளல் சீதக்காதி
8. உமறுப்புலவர் எழுதிய வேறுநூல் எது?
   முதுமொழிமாலை, சீதக்காதிக் கோவை
9. சீறாப்புராணம் யாருடைய வரலாற்றைக் கூறுகிறது?
   முகம்மது நபிகள் நாயகம்
10. சிந்தையள்ளும் சீறா எனப் போற்றப்படும் நூல் யாது?
    சீறாப்புராணம்
11. சீறாப்புராணத்தின் காண்டங்கள் எத்தனை? அவை யாவை?
    காண்டங்கள்: 3, அவை விலாதத்துக் காண்டம், நுபுவத்துக் காண்டம், ஹிஜிரத்துக் காண்டம்
12. வள்ளல் சீதக்காதியின் இயற்பெயர் என்ன?
    ஷெய்க் அப்துல் காதர் மரைக்காயர்
13. உமறுப்புலவரின் ஆசிரியர் பெயர் என்ன?
    முகமது மரைக்காயர்
14. யாருடைய வேண்டுக்கோளுக்கு இணங்க உமறுப்புலவர் சீறாப்புராணத்தை இயற்றினார்?
    சீதக்காதயின் வேண்டுக் கோளுக்கிணங்க இயற்றப்பட்டது.

Scanned by CamScanner

15. சீறாப்புராணம் நூல் முழுமைப் பெற உதவிய செய்த வள்ளல் யார்?
அபுல் காசிம்

16. தமிழ் விடு தூது யார் யாருக்கு அனுப்பியது?
தமிழ்விடு தூது மதுரை சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண்ணொருத்தி தமிழை அவர்பால் தூதாக அனுப்புவது.

17. தூது பாடுவதற்குரிய இலக்கணம் யாது?
கலிவெண்பா

18. ஆடவன் விடுத்த தூது நூல் எது?
விறலி விடு தூது

19. தமிழ்விடு தூது நூலை முதன் முதலில் அச்சில் வெளியிட்டவர் யார்?
உ.வே.சாமிநாதையார்

20. தமிழ் என்ற மணமகனுக்குப் பட்டத்து மனைவியராக விளங்கியது எது?
வெண்பா – செப்பலோசை, ஆசிரியப்பா – அகவலோசை, கலிப்பா – துள்ளலோசை, வஞ்சிப்பா – தூங்கலோசை.

21. தமிழ்விடு தூது குறிப்பிடும் அலங்காரம்(அணி) எத்தனை?
தன்மையணி முதல் பாவிகவணி ஈறாக முப்பதைந்து அணிகள் உள்ளன.

22. யாப்பின் உறுப்புகள் எவை?
எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, ஓசை, பாவினம்

23. மந்திரத்தினால் ஒழியாத சார்வினையை தன் தந்திரத்தினால் ஒழித்தவர் யார்,
திருமூலர்

24. முதல் தமிழ்ச் சங்கத்தில் இருந்த பலர்கள் எத்தனை பேர்?
நாற்பத்தொன்பது(49)

25. கழறிற்றறறிவார் என்று அழைக்கப்படுபவர் யார்?
சேரமான் பெருமாள் நயனார்

26. முதலையுண்ட பிள்ளையைப் பின் ஈன்று தரச்சொல்லி இசைந்தோர் யார்?
சுந்தரர்

27. "கார் இருளில் பாழ் மண்டபத்தே தன் காதலியை

சொர் துயிலில் நீத்தது துணிவன்றோ" யார் யாரிடம் கூறியது?

தமயந்தி புரோகிதனிடம் கூறியது.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. தமிழக வீற்றிருந்தோர் யார் என்பதை நும் பாடப்பகுதி கொண்டு விவரி.

மதுரை சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண்ணொருத்தி தமிழைத் தூது அனுப்புகிறாள். தமிழின் பெருமையினை வீற்றிருந்தோர், சிறப்பித்தோர், வாழ்வித்தோர், வழி நின்று கூறுதல். கூடல் நகரில் சங்கப் புலவராய்

Scanned by CamScanner

இருந்தவரும், எட்டு திசைகளிலும் வெற்றியை மட்டுமே நிலைநாட்டிய தமிழரசி என்ற பெண்ணரசியும், ஓரேட்டினைக் கையிலெடுத்த கணபதியும், பாடலின் சிறப்பை உணர்த்திய முருகக் கடவுளும், தன் மூன்று வயதிலேயே வடமொழியையும், தென்மொழியையும் கற்ற திருஞானசம்பந்தரும், முதலையுண்ட பிள்ளையை மீட்ட சுந்தரரும், சிவனின் திருவடியருள் பெற்ற திருநாவுக்கரசரும், தமிழ் மூன்றும் அருளிய அகத்திய முனிவரும், தொல்காப்பியம் அருளிய தொல்காப்பியரும், முதல்வனிடம் செல்லும் உயிர்களை தம் பன்னிரண்டு நூற்பாவில் எழுதிய மெய்கண்டதேவரும், திருக்குறளை இயற்றிய தெய்வமொழிப் பாவலராகிய திருவள்ளுவர் என் எல்லாருமாக தமிழே நீ இருந்தமையால் உன்னைப் போற்றுகின்றேன் எனத் தமிழின் சிறப்பினை கூறுகின்றார்.

2. தமிழினைத் தலைவி எங்ஙனம் உருவகப்படுத்தி வருணித்துள்ளாள்?

தமிழே பெருமை தங்கிய புவியில் புண்ணியம் வாய்ந்த உந்தியில் தோன்றினாய். தலை, கழுத்து, மூக்கு, மார்பு ஆகியவற்றை சார்ந்து உதடு, நாக்கு, பல், மேல்வாய் ஆகிய கருவிகளால் வடிவமானாய். முதல் எழுத்து முப்பதாக விளங்கினாய், சார்பெழுத்து இருநூற்று நாற்பதாகவும் பிறந்தாய், ஆசிரியர்களுக்கு கண்மணிபோல் விளங்கினாய். அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலும் புகட்ட வளர்ந்தாய், செய்யுள் சொற்கள் நான்கும், செந்தமிழ் சொற்கள் நான்காகவும் பிறந்தாய், யாப்பின் உறுப்புகள் எட்டும், அலங்காரம் முப்பதைந்தும், பாவின்கண் அமைந்த செப்பலோசையும், அகவலோசையும், துள்ளலோசையும், தூங்கலோசையும் பெற்றாய், நூற்று மூன்று பண்களாகவும், ஒன்பது சுவையும் பெற்று பதினெட்டு வகைச் சிறப்புக்களாகிய வாழ்வெல்லாம் நோக்கி மகிழ்ந்தாய்.

3. பொய்யடிமையில்லாப் புலவர்களாகத் தமிழ் எங்ஙனம் விளங்குகின்றது?

குற்றமில்லாத கவிதைபாடும் திருமாளிகைத் தேவரும், வினை, சூழ்ச்சி இரண்டையும் மந்திரம் என்ற நூலினால் நீங்கிய திருமூலரும், பொய்யடிமையில்லாப் புலவர்கள் என்று கூறப்பட்ட சங்கப் புலவர்களும், செம்மையான சொற்களை உடைய கழறிற்றறிவாரும், தெய்வமொழிப் பாவலரும், கல்லாத மூடர்களுக்கு சிங்கம் போன்று தமிழே நீ இருக்கின்றாய், உன் திருவடிகளையே நான் போற்றுகின்றேன்.

4. தமிழின் பெருமைகளாக தலைவி குறிப்பிடும் செய்திகளை நும் பாடப்பகுதிக் கொண்டு விளக்குக.

மதுரை சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண்ணொருத்தி தமிழைத் தூது அனுப்புகிறாள். தமிழின் பெருமையினை வீற்றிருந்தோர், சிறப்பித்தோர், வாழ்வித்தோர், வழி நின்று கூறுதல். கூடல் நகரில் சங்கப் புலவராய் இருந்தவரும், எட்டு திசைகளிலும் வெற்றியை மட்டுமே நிலைநாட்டிய

Scanned by CamScanner

தமிழரசி என்ற பெண்ணரசியும், ஓரேட்டினைக் கையிலெடுத்த கணபதியும், பாடலின் சிறப்பை உணர்த்திய முருகக் கடவுளும், தன் மூன்று வயதிலேயே வடமொழியையும், தென்மொழியையும் கற்ற திருஞானசம்பந்தரும், முதலையுண்ட பிள்ளையை மீட்ட சுந்தரரும், சிவனின் திருவடியருள் பெற்ற திருநாவுக்கரசரும், தமிழ் மூன்றும் அருளிய அகத்திய முனிவரும், தொல்காப்பியம் அருளிய தொல்காப்பியரும், முதல்வனிடம் செல்லும் உயிர்களை தம் பன்னிரண்டு நூற்பாவில் எழுதிய மெய்கண்டதேவரும், திருக்குறளை இயற்றிய தெய்வமொழிப் பாவலராகிய திருவள்ளுவர் என் எல்லாருமாக தமிழே நீ இருந்தமையால் உன்னைப் போற்றுகின்றேன்.

தமிழே பெருமை தங்கிய புவியில் புண்ணியம் வாய்ந்த உந்தியில் தோன்றினாய். தலை, கழுத்து, மூக்கு, மார்பு ஆகியவற்றை சார்ந்து உதடு, நாக்கு, பல், மேல்வாய் ஆகிய கருவிகளால் வடிவமானாய். முதல் எழுத்து முப்பதாக விளங்கினாய், சார்பெழுத்து இருநூற்று நாற்பதாகவும் பிறந்தாய், ஆசிரியர்களுக்கு கண்மணிபோல் விளங்கினாய். அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலும் புகட்ட வளர்ந்தாய், செய்யுள் சொற்கள் நான்கும், செந்தமிழ் சொற்கள் நான்காகவும் பிறந்தாய், யாப்பின் உறுப்புகள் எட்டும், அலங்காரம் முப்பதைந்தும், பாவின்கண் அமைந்த செப்பலோசையும், அகவலோசையும், துள்ளலோசையும், தூங்கலோசையும் பெற்றாய், நூற்று மூன்று பண்களாகவும், ஒன்பது சுவையும் பெற்று பதினெட்டு வகைச் சிறப்புக்களாகிய வாழ்வெல்லாம் நோக்கி மகிழ்ந்தாய்.

இவ்வாறு தலைவி தமிழின் சிறப்பினை உருவகப்படுத்தி வருணித்துக் கூறியுள்ளாள்.

5. தமயந்தி புரோகிதன் மூலமாக நளனை எங்ஙனம் கண்டறிந்து பின் அவனுடன் இணைந்தாள் என்பதை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

நளவெண்பா புகழேந்திப்புலவரால் இயற்றப்பெற்ற சிறுகாப்பியம். 424 வெண்பாவினால் பாடப்பெற்ற நூல். தமயந்தி புரோகிதன் மூலம் நளன் பற்றி அறிந்துவரச் செய்தல், புரோகிதன் பலகாடு மலைகளைத் தாண்டி அயோத்தி நகரை அடைதல். நள்ளிரவில் காட்டில் தன் மனைவியை தனியே விட்டுச் செல்லுதல் அரசனுக்கு ஏற்ற செயலா? என வினவுதல், நளன் அதற்கு நான் முன் செய்த வினை என்று வருந்துதல், நளனை கண்டறிந்த செய்தியை புரோகிதன் கூறுதல், தேர்பாகன் ஒருவன் சொற்சிறப்பினால் நளராஜனை ஒத்திருக்கிறான் உடம்பைப் பார்த்தால் ஒப்பு ஆவான் எனக் கூறுதல். தமயந்தியின் இரண்டாம் சுயவரம் என்ற வார்த்தை சொல்லக்கூடியது ஆகுமோ என்றான். முன்பு நான் செய்த தீவினைகளின் பயனாக வந்ததோ என நினைத்தல். நளன் தன் குதிரைகளைத் தேரில் பூட்டிக்கொண்டு செலுத்தினான். அத்தேரானது காமமயக்கம் கொண்ட ஒருவனுடைய மனவேகத்தினும் விரைவாகச் சென்றது. இருது பண்ணனின் மேலாடை கீழே விழுதல் நேர அளவுக்குள் எடுத்தல், அதுவரை தங்கியிருந்த கலிபுருஷன்,

Scanned by CamScanner

பசி நீங்கியது போல நீங்கியத. நளன் வீமாரசனின் நகரை அடைந்து சமையல் தொழில் செய்தல், தமயந்தி நளன்தான் என அறிய, சேடியையும், தன் மக்களையும் அனுப்புதல். தன் மக்களைச் சந்தித்தல், தமயந்தியின் துயரமும் நளனின் சுயவுருவமும், தமயந்தி வீமராசனிடம், சமையல் தொழில் செய்பவனே நளன் குறிப்பிட்டுக் கூறுகிறாள்.

வீமன் நளனின் உருவத்திற்கும், பேச்சிற்கும், தொழிலிற்குமான மாறுபாடு கண்டு நளன் என்பதை அறிதல், தன் சுயவுருவம் காண்பிக்க வேண்டுதல், கார்கோடகன் கொடுத்த ஆடையை உடுத்தி தன் சுயவுருவம் மீண்டும் பெற்றான், நளனின் மக்கள் நளனைச் சுயவுருவில் கண்டதும், தன் தந்தையின் பாதங்களில் விழுந்து வணங்குதல், தேவர்கள் வாழ்த்த நளனும் தன் மனைவி மக்களுடன் இனிதே வாழ்வைத் தொடர்ந்தான்.

6. நபிகள் நாயகம் மானிடம் நெருங்கியதும் மான் கூறியவற்றையும் தொகுத்துரைக்க.

தமிழில் அமைந்த இஸ்லாமியக் காப்பியம். முகமது நபி அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது. இஸ்லாம் நெறியை உலகுக்கு உணர்த்திய நபிகள் அரபிகளின் கூட்டத்தில் சிங்கம் போன்று விளங்கியவர், சோலைகள் ஒளிரப்பெற்ற மலையிடத்துச் செல்லுதல், வேடன் காட்டினில் ஒரு மானைக் கட்டி வைத்திருப்பதைப் பார்த்தல், மானைக் கண்டு அதனருகே செல்லுதல், மான் நபிகளிடம் தன் துன்பத்தை சொல்லத் தொடங்குதல், கருணை அதிகரிக்க அத்துன்பத்தை நபிகள் கேட்டல், வேதத்தின் புண்ணிய மார்க்கத்தினை சொல்லவந்த நபிகளே, என் ஜீவனைப்போல் பிரியாத ஆண்மானும், குட்டியும், என் கூட்டமும் மலைப்பக்கங்களில் வாழ்ந்திருந்தோம். இடி முழக்கம் புலியினது முழக்கம் கேட்டு வெவ்வேறு திசைகளில் ஓடினோம்.

வேடன் ஒருவன் கயிற்றினால் உண்டாக்கிய வலையில் அகப்பட்டு இங்கு இருக்கிறேன். என்னுடைய கன்றும், ஆண்மானும் என்னைக் காணமல் பரிதவிக்கும் எனது மடிப்பைக் கொண்ட பால் மடியானது இறங்கிப் பாலும் வழிகின்றது. எனது கன்று என்ன ஆயிற்றோ? எனக்காக தாங்கள் பிணையென்று கூறி என்னை விடுவித்தல் வேண்டும். என் கன்றிற்கு பாலைக்கொடுத்துவிட்டு பசியைப் போக்கி கூட்டத்தோடு சேர்த்துவிட்டு ஒரு நாழிகை நேரத்தில் மீண்டும் வருவேன். நபிகள் வேடனிடம் மானுக்கு பிணையாக நிற்பதாகக்கூறி மானை விடுவிக்கக் கேட்டல். வேடன் சிரித்துவிட்டு, இதை நான் ஏற்க மாட்டேன் எனக் கூறுதல், மான் திரும்பவில்லை என்றால் ஒரு மானுக்கு பதிலாக இரண்டு மானைத் திரும்பத் தருவேன் என்றார். அதற்கு வேடன் உடன்படுதல், நபிகள் நாயகம் மானின் வருத்தத்தையும் அதன் வார்த்தையையும் கேட்டு, அதற்குப் பிணையாகத் தானிருக்கச் சம்மதித்தார்.

Scanned by CamScanner

7. மானுக்குப் பிணைநின்ற படலத்தில் மானின் பண்பினையும் நபிகள் நாயகத்தின் உயர்வினையும் விளக்குக.

நபிகள் நாயகம் மானின் துயரத்தைக் கண்டு அதற்குப் பிணையாக இருப்பதாகக் கூறுதல், ஒரு நாழிகைப் பொழுதில் மான் வரவில்லை என்றால் இரண்டு மான் கொடுப்பதாக வேடனிடம் கூறல். மான் தனது குட்டியையும், ஆண்மானையும் கண்டது, ஆண்மானின் மனத்துன்பத்தையும், கன்றின் பசியையும் நீக்கியது, மான் கூட்டத்திடம் தான் வழிதவறி வேடனிடம் மாட்டிய செய்தியையும், நபிகள் அவர்களின் பிணையாக ஒரு நாழிகை வைத்துவிட்டு வந்ததையும் கூறுகின்றது. ஆண்மான், குட்டியையும் கூட்டத்தையும் விட்டு செல்லவேண்டாம் எனக்கூறல். முகமது நபி அவர்களைப் பிணையிலிருந்து மீட்காமல் இருந்தால் நரகத்திற்கு செல்வேன் என்றது.

புலியின் வாயில் அகப்பட்டு இறந்துபோவேன் அன்றி இவ்வுலகில் வாழ்வதற்கு இடமில்லை. இப்புவியில் மேலும் மேலும் தங்கியிருக்கும் பெரிய விருப்பம் ஏதும் இல்லை. மான் கூட்டங்கள் அனைத்தையும் தேறச் செய்தது ஆண் மானை குட்டியோடு இணைத்து விடைபெற்றது. காட்டிடத்தில் செல்லும் நேரத்தில் கன்று மறித்தது. உன்னை நீக்கிவிட்டு நான் உயிர்வாழ மாட்டேன் என்று முன்னே ஓடிற்கு. நபிகள் நாயகம் குட்டியும் பெண்மானும் இணைந்து வருவது கண்டு மனமகிழ்தல், வேடுவனிடம் ஒரு மானுக்கு இரண்டு மான் வருகின்றது எனக் கூறுதல். குட்டிமானும் பெண்மானும் நபிகளில் காலில் விழுந்து வணங்கியது. பெண்மான் தங்களின் பிணையை மீட்டுக் கொள்ளுங்கள் என்றது, நபிகள் வேடுவனிடம் பசியை நீக்கிக் கொள்க எனக் கூறுதல், தான் வாக்கிலிருந்து மாறாத பண்பைக் கொண்ட மானின் பண்பு கண்டு, நபிகள் நாயகத்தின் சிறப்பினை உணர்ந்து வேடன் மனம் மாறினான்.

Scanned by CamScanner

## அலகு 4

## நளவெண்பா

### பகுதி அ

**1. நளவெண்பா குறிப்பு வரைக**

அமிழ்தினும் இனிய நம் இனிய தமிழ்மொழியில் கற்பனை வளமும், கற்போர் விரும்பும் அனைத்துச் சுவைகளும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற நூல் நளவெண்பா, இந்நூல் வெண்பா யாப்பில் நளன் கதையைக் கூறுகின்றது. சுயம்வரக் காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் எனும் 3 காண்டங்களைக் கொண்டு 424 வெண்பாக்களால் அமைந்த சிறுகாப்பியம் ஆகும்.

**2. நளவெண்பாவின் முதல் நூல் எது?**

வடமொழியில் அமைந்துள்ள மகாபாரத்தில் ஆரணிய பருவத்தில் பயின்று வந்துள்ள கதைகளுள் நளோபாக்யானம் எனும் கிளைக் கதையே நளவெண்பாவிற்கு முதல் நூலாகும்.

**3. புரோகிதனின் வினாவிற்கு நளன் மொழிந்த விடை யாது?**

"ஒளிபொருந்திய வளையல்களை அணிந்த பொன்மகளாம் தமயந்தியை, குளிர்ச்சி பொருந்திய முத்து மாலையும், பூ மாலையும் அணியப் பெற்ற வெண்கொற்றக் குடையைக் கொண்ட அரசன், அவளைக் கொடிய காட்டில் தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது கைவிட்டு விட்டான் என்று ஐயப்படாதே! அது முந்தைய பிறவியின் விதிப்பயன் என்று உணர வேண்டும்!" என்று தேர்ப்பாகன் வடிவில் இருந்த நளன் புரோகிதனின் வினாவிற்கு விடையளித்தான்.

**4. அயோத்தி சென்று வந்த புரோகிதன் நளனைப் பற்றித் தமயந்தியிடம் என்ன கூறினான்?**

மார்பில் பூணூல் அணிந்த புரோகிதன், மணம் கமழும் பூக்களைக் கொண்ட கூந்தல் உடைய தமயந்தியிடம், "பேசுகின்ற பொழுது அவன் நம் அரசனை ஒத்திருக்கின்றான். அதனால் மீண்டும் அவனை ஒரு முறை உற்று நோக்கினால், அவனுடைய உடல் தோற்றம் நம் அரசனை ஒத்திருக்கவில்லை, தேர்ப்பாகன் அவன்!" என்று கூறினான்.

**5. புரோகிதனிடம் தமயந்தி வினவியது யாது?**

பல நாடுகளில் நளனைத் தேடி வந்த புரோகிதனிடம், "கண்ணீரால் மார்பக நனைத்த தமயந்தி, "இது நாள் வரை எங்கே தங்கினாய்? எத்திசை எல்லாம் சென்று தேடினாய்? நீ சென்று தேடிய திசைகளில் எங்காவது கங்கையாறு ஓடும் வளம் பொருந்திய நாட்டிற்கு அரசனாய் நளனைக் கண்டாயா? சொல்" என்று வினவினாள்.

**6. தமயந்தி புரோகிதனிடம் கூறியது யாது?**

தமயந்தி புரோகிதனிடம், "மீண்டும் ஒரு சுயம்வரத்தை வீமனின் செல்வ மகளா தமயந்திக்கு, வீமன் நடத்தவிருக்கிறான் என்று சொன்னால், "பெரிய கொடைப்பண் கொண்ட இருதுபன்னனுக்குத் தேரோட்டுவதற்காக நம் அரசன் இங்கு வருவான். அதனா அந்நாட்டில் போய்ச் சொல்" என்று கூறினாள்.

Scanned by CamScanner

7. **தமயந்தி புரோகிதனுக்கு இட்ட பணி யாது?**

தமயந்தி, "பல நாடுகளுக்குச் சென்று, நள்ளிரவில் பாழடைந்த மண்டபத்தில் தான் விரும்பித் திருமணம் செய்த மனைவியை, அவள் களைப்புற்றுத் தூங்கிக் கொண்டு இருக்கும் பொழுது அவளை விட்டு விட்டுச் சென்றது மிகவும் துணிவான செயல் அன்றோ? என்று நீ கூறு. அதற்கு யார் பதில் கூறுகின்றார்? என்பதை மட்டும் அறிந்து வா!" என்று புரோகிதனைப் பணித்தாள்.

8. **புகழேந்திப் புலவர் – குறிப்பு வரைக**

வடமொழியில் அமைந்துள்ள மகாபாரதத்தில் ஆரணிய பருவத்தில் பயின்று வந்துள்ள கிளைக் கதைகளுள் ஒன்றான நளோபாக்யானம் என்பதைத் தமிழில் நளவெண்பா எனப் புகழேந்தியார் வெண்பா யாப்பில் படைத்துள்ளார். வெண்பா யாப்பில் பாடியமையால் புகழேந்தியார் வெண்பாவில் புகழேந்தி என்று பாராட்டப் பெற்றார். இவர் தொண்டை நாட்டைச் சேர்ந்த செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பொன் விளைந்த களத்தூரில் பிறந்தவர். இவர் ஒட்டக்கூத்தர், கம்பர் ஆகியோர் வாழ்ந்த காலத்தவர். கி.பி.9 ஆம் நூற்றாண்டினர் என்பர். இவரை ஆதரித்த வள்ளல் சந்திரன் சுவர்க்கி ஆவார். தன்னை ஆதரித்த வள்ளலைத் தன் நூலில் தக்க இடத்தில் பாராட்டியுள்ளார்.

9. **இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. முன்னை வினையால் முடிந்ததோ மொய்குழலாள் என்னைத் தான் காண விழைந்ததோ?**

**இடம்:** புகழேந்திப் புலவர் இயற்றிய நளவெண்பா என்ற நூலில் கலி நீங்கு காண்டத்திலிருந்து எடுக்கப்பெற்ற வரிகள் இவை.

**பொருள்:** முற்பிறவியில் செய்த வினையால் விளைந்ததா? அல்லது தமயந்தி என்னைக் காண விழைந்ததா? எனத் தனக்குள் நளன் கூறுவது.

**விளக்கம்:** தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் என்பதைக் கேள்வியுற்ற நளன், தன் மரபுக்குப் பொருந்தாத வார்த்தையை உலகம் உணரும் வண்ணம் எவ்வாறு கூறினாள்? எனத் தயங்கினான். முற்பிறவியின் பயனால் விளைந்ததா? அல்லது தமயந்தி என்னைக் காண விழைந்ததால் இதைக் கூறினாளோ? எனத் தனக்குள் எண்ணினான்.

10. **நளன் தேர் ஓட்டிய சிறப்பினை விளக்குக.**

நளன் செலுத்துகின்ற தேர் தமயந்தியிடம் நீங்காத விருப்பம் கொண்ட இருதுபன்னனது மனதிலும் விரைந்து சென்றது. தேரில் ஏறிச் செல்லும், இருதுபன்னன் மன்னனது மேலாடை காற்றில் பறந்து விழ, அவன்; அவ்வாடையை எடு! என்று நளனிடம் கூறிய அளவில் தேர்க்குதிரைகள் நாலாறுகாத தூரம் சென்றுவிட்டன.

## பகுதி ஆ

1. **தமயந்தியின் இரண்டாம் சுயம்வரம் பற்றி நளனுக்கும் இருதுபன்னனுக்கும் இடையில் நடந்த உரையாடலை எழுதுக.**

தமயந்தியின் இரண்டாம் சுயம்வரச் செய்தியைக் கேட்ட இருதுபன்னன், அப்போது தன் அருகிலிருக்கும் நளனிடம் சுயம்வரத்தைப் பற்றிய கருத்தினைக் கேட்டான். அதற்கு நளன் இருதுபன்னனிடம், கருவி வைத்துப் பிடித்தாலும் நெல் வயலில் இருக்கின்ற பெரிய

Scanned by CamScanner

வரால்மீன் அவ்வலையைக் கிழித்துக்கொண்டு மீண்டும் அவ்வயலை... அப்படிப்பட்ட நாட்டிற்கு அரசனே! கற்பினில் குறைவுபடாத தமயந்... சுயம்வரம் என்று அறிவித்திருந்தாலும், அவள் தன்னை மணந்து கொண்ட... வேறு யாருக்கும் உரிமை ஆகமாட்டாள்! மேலும், அவளுடைய உள்ளமும் பி... நாடுமோ! நாடாது! ஆகவே, இவ்வாறு சொல்லக் கூடுமோ? கூடாது'' என்று கூ...

அது கேட்ட இருதுபன்னன் அவனை நோக்கித் தமயந்திக்கு முதல் சுயம்வரம் ந... அந்நாளில் அவள் என்னைத்தான் மணக்க விரும்பியிருந்தாள். ஆனால் அவள் வீசிய மாலை, என்மேல் விழாமல் தவறிப் போய் அருகில் இருந்த நளன் மேல் விழுந்துவிட்... அதனால்தான் இரண்டாவது சுயம்வரத்தைத் தமயந்திக்கு இப்பொழுது நிகழ்... விருக்கின்றனர், என்றான். இதனையே,

''என்மேல் எறிகின்ற மாலை எழில் நளன்தன்
முன்னே விழுந்தது காண் முன்நாளில் அன்னதற்குக்
காரணம் தான் ஈது அன்றோ என்றான்''

எனப் புகழேந்திப் புலவர் நளவெண்பாவில் கூறுகின்றார்.

**2. தமயந்தியின் இரண்டாம் சுயம்வரம் பற்றிக் கேள்வியுற்ற நளனின் மனவுண... வெளிப்படுத்துக.**

தமயந்தியின் இரண்டாம் சுயம்வரம் கேட்டு நளன் ஒரு சிறிது கூட ஐயப்படவில்... தன் மனைவியைத் தன் அரசனிடம் கூட,

''குறையாத கற்பினாள் கொண்டானுக்கு அல்லால்
இறவாத ஏந்திழையாள்!

என்று நம்பிக்கையுடன் கூறி, அவளைப் பற்றி இவ்வாறு சொல்லலாமா? என்றும் ... விட்டான். ஆனாலும், அவன் மனதில் சில குழப்பங்கள். கொஞ்சம்கூட அரச குலத்தி... பொருத்தாத இவ்வார்த்தையை உலகம் அறிய அவள் சொல்ல உடன்பட்டது; 'என்... தேடிக் கண்டுபிடிக்க இருக்குமா? அல்லது இதுவும் முன்வினைப் பயனால்... திருக்குமா? எதனால் இப்படி? என்று தனக்குள் ஏற்பட்ட மனமயக்கத்தால் புலம்பி... இருப்பினும், இருதுபன்னனுக்குப் பணிபுரியும் கடமையை மேற்கொண்டுள்ளேன். ஆ... அவனுடைய ஏவலை ஏற்று முடிப்பதே என் கடமை என்று எண்ணி இருதுபன்ன... குண்டினபுரத்திற்குச் சென்றான். இவ்வாறு தன் மனைவிக்கு இரண்டாம் சுய... என்பதைக் கேள்விப்பட்டவுடன் அவள் மேல் கொண்டுள்ள நம்பிக்கையில் ஒரு ... மாறாதவனாகவும் அதே சமயம் உலகறிய என் உத்தமி இப்படிச் சொல்வதற்குக் கா... தன் முன்வினைப் பயனே! என்றும் அல்லது தன்னைக் காண அவள் செய்த திட்டம... இருக்கலாம் என்றும் எண்ணுகின்றான். எப்படி இருப்பினும் கொண்ட கடமை... காதலிலும், நம்பிக்கையிலும் மாறாத நளனின் மனவுணர்வைக் காண முடிகின்றது.

**3. நளன் தேர் சென்ற சிறப்புப் பற்றிக் கூறுக.**

தமயந்தியின் செயலைத் தன் மனதிற்குள் பலவாறு எண்ணி ஆர... கொண்டிருக்கும் நளன் செலுத்துகின்ற தேர், முற்பிறவியில் செய்த வினை கு... போல, தொலைவானது குறுக, தமயந்தியிடம் நீங்காத விருப்பம் கொண்ட இருதுபன்... மனதினைக் காட்டிலும் விரைந்து சென்றது.

Scanned by CamScanner

இருதுபன்னன் தேரில் ஏறிச் செல்லும் போது, நளன் ஓட்டிய வேகத்தால் காற்றில் இருதுபன்னனின் மேலாடை பறந்து போய் விழுந்தது. அவன் அவ்வாடையை எடுத்து வா என்று சொல்லிய அளவில், நளன் கோலால் விரைந்து செல்லும்படியாகத் தூண்டப்பட்ட தேர்க் குதிரைகள் நாலாறுகாத தூரம் கடந்துவிட்டன. இது நளனின் தேரோட்டும் திறத்தினை விளங்குவதாக அமைகின்றது.

**4. நளனுக்கும் அவனது குழந்தைகளுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலை எழுதுக.**

தான் பெற்ற பிள்ளைகளைத் தன் கண் முன்னே கண்ட நளன் மனம் நடுங்கி, பெருமூச்செறிந்து, தன் வீரம் பொருந்திய தோள்களில் அவர்களை அணைத்துக் கொண்டு, "என் பிள்ளைகளைப் போல இருக்கும் நீங்கள் யார் பிள்ளைகள்?" என்று கேட்டான், அதற்குக் குழந்தைகள், நளனிடம்,! 'நிடத நாட்டில் வாழ்ந்து வந்த நளமகாராஜாவின் பிள்ளைகள்' என்று கூறினர். மேலும், "எங்கள் தாயைக் காட்டில் விட்டு விட்டு எங்கள் தந்தை சென்று விடவே நாங்கள் இங்கே வசிக்கின்றோம். எங்கள் வளம் பொருந்திய நாட்டை வேறொருவன் ஆள்கின்றான்!" என்று அழுதுகொண்டே கூறினர். அது கேட்ட நளன் துன்பமுற்றுச் செய்வதறியாது கண்ணீர் விட்டு உயிர் மட்டும் நீங்காத சிலையாக நின்றான். பிறகு,

"உங்கள் அரசு ஒருவன் ஆள நீர் ஒடிப்போந்து
இங்கண் உறைதல் இழுக்கன்றோ?" என்று

தன் பிள்ளையிடம் வினவினான். அதற்கு இளவரசன்.

"நெஞ்சால் இம்மாற்றம் நினைந்துரைக்க நீ அல்லாது
அஞ்சாரோ மன்னர் அருமடையா?"

எனக் கோபத்துடன் கேட்டுப் பின்னர், "சமையல் தொழில் செய்யும் உனக்கு அரசன் சிறப்பு என்ன தெரியும்? அவருடைய நேர்மை தவறாத வாய்மைக் குணத்தால்தான் தன் நாட்டையே விட்டுச் சென்றார். ஆதிசேடனால் தாங்கப்படுகின்ற, முறித்துக் கொண்டு வரும் மதயானைகளின் மேல் ஏறிவந்து, தங்கள் மணி முடிகள் தோயும்படி வணங்குவதனால் ஏற்பட்ட தழும்புகளை எம் தந்தையாகிய நளனுடைய பாதங்களில் எங்கும் காணலாம். என்றும் கூறினான். அதைக் கேட்ட நளன்.

"மன்னர் பெருமை மடையர் அறிவரோ
உன்னை அறியாது உரைசெய்த என்னை
முனிந்து அருளல் என்று முடிசாய்த்து நின்றான்".

இவ்வாறு கனிந்து உருகிக் கண்களில் நீர் வழிய நின்றான் நளன். இவ்வாறு நளனுக்கும்; அவன் மக்களுக்கும் இடையே உரையாடல் நிகழ்ந்தது.

**5. நளன் சுய உருப்பெறும் விதத்தை விவரி**

**(அல்லது)**

**கலி நளனை விட்டு நீங்கிய விதத்தைப் புலவர்காட்டும் உவமை வழி விளக்குக.**

கலியின் வஞ்சனையால் அரசுரிமையை இழந்த நளன் பாம்புகளுக்கு அரசனாகிய கார்க்கோடகன் தனக்கு முன்பு கொடுத்திருந்த ஆடைகளில் ஒன்றை எடுத்துத் தன்

Scanned by CamScanner

இடையில் உடுத்திக் கொண்டான். மற்றொன்றை மேலே விரித்துப் போர்த்திக்கொண்டா
இவ்வாறு கார்க்கோடகன் கொடுத்த இரண்டு ஆடைகளையும் நளன் அணிந்தவுடன், முன்
காட்டில் தன் மனைவியாகிய தமயந்தியை விட்டு நீங்கி, வேற்று வடிவத்துடன் மறை
வாழ்ந்த தேர்ப்பாகன் வடிவம் திருமாலின் உலகளந்த திருவடிகளைச் சரணமா
பற்றியவரின் பாவங்களை நீக்குவதைப் போல நீங்கிற்று. அவன் தன் முந்தைய வடிவத்தை
பெற்று மகிழ்ந்தான். இதுவே புலவர் காட்டும் உவமையாகும்.

**6. வீமராசன் நளனைக் கண்டுபிடித்த விதத்தை விவரி.**

**(அல்லது)**

**"உன்னை ஒளியாது காட்டு உன் உரு" என்ற சூழலை விவரி.**

தமயந்தி தன் தந்தை வீமராசனிடம், இந்நகருக்கு வந்த அரசன் இருதுபன்னனுக்
தேரோட்டியாய் உள்ள, இப்பொழுது நம் அரண்மனையில் சமையல் தொழில் செய்கி
வாகுகனே எங்கள் அரசன் நளன்! என்று கூறுகின்றாள். உடனே வீமராசன் வேந்தர்
பலர் தன்னைச் சூழ்ந்து வர, வாகுகன் இருக்கும் இடத்தை அடைந்து தன் அன்பு மகளா
தமயந்தியின் அன்புக்குரியவனாகிய அவனைக் கண்டான். ஆனால், நளனுடைய முந்
உண்மையான தோற்றத்தைக் காண முடியாமல் திகைத்து நின்றான். வீமரா
அவ்வாகுகனுடைய வாய்மொழிக்கும்; அவனுடைய செயல்களுக்கும், எண்ணத்திற்
பொருந்தாமல் உள்ளது. அவன் கொண்டிருந்த தோற்றம் என்று நினைத்து உண்
அறிதற்பொருட்டு எல்லா வழிகளையும் ஆராய்ந்து இறுதியாக அவ்வாகுகனுடன் உரை
அவனுடைய நுட்பமான பேச்சுத் திறத்தால் அவன் நளனே என்பதை அறிந்து கொண்ட
அதனால் வாகுகனிடம், "நீ உண்மையை மறைக்காமல் உன் உண்மையான உருவத்
எங்களுக்குக் காட்டுவாயாக! என்றான்.

**7. தமயந்தியின் செயல்பாட்டை எழுதுக.**

தன்னைக் காட்டில் விட்டுச் சென்ற கணவனைத் தேடிக் கண்டுபிடிப்பதற்க
தமயந்தி பல முயற்சிகளைச் செய்கின்றாள்.

**புரோகிதனிடம் நளனைத் தேடப் பணித்தது.**

"ஓர் அரசன் நள்ளிரவில் பாழடைந்த மண்டபத்தே தன் மனைவியை அவள் தூ
கொண்டு இருக்கும் போது விட்டுச் சென்றது துணிவான செயல் அன்றோ?" என்று எ
நாடுகளிலும் சென்று சொல்! அதற்கு யார் பதில் தருகின்றார்? என்பதை மட்டும் அ
வா! என்று தமயந்தி புரோகிதனைப் பணித்தாள்.

**இரண்டாம் சுயம்வரம் அறிவித்தது**

தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் என, நளன் தங்கியிருக்கும் நாட்டிக்குச் சென்
அறிவித்தால், அந்நாட்டு அரசன் இங்கு வர, அவன் தேரோட்டி வருவான். எனவே அ
சென்று சொல் என்று தமயந்தி புரோகிதனிடம் கூறினாள்.

**நளனின் மடைத் தொழிலை அறிந்து வரச் செய்தது.**

வீமன் அரண்மனைக்கு வந்த நளன் மடைத் தொழில்களைச் செ
தொடங்கியவுடன் தன் தோழியருள் ஒருத்தியை அனுப்பி, அவன் சமையல் செய்
விதத்தை அறிந்து வரச் சொன்னாள் தமயந்தி.

Scanned by CamScanner

2. **நளன் குடும்பத்தார் ஒன்று சேர்ந்தவிதத்தை விளக்குக.**

தமயந்தியின் கட்டளைப்படி, அவள் தோழி, நளனின் பிள்ளைகளை அழைத்துச் சென்று, நளனாகிய வாகுகனிடம் விட்ட போது, அவன் அவர்களைக் கண்டு கூறிய சொற்களைத் தோழியும், பிள்ளைகளும் தமயந்தியிடம் முழுமையாகச் சொன்னார்கள். அவ்வாறு அவர்கள் கூறி முடிக்கும் முன்பே தமயந்தி ஆற்ற முடியாதவளாய் அழுதாள்.

பின்னர், அவள் தன் தந்தையிடம் சென்று, "இந்நகர்க்கு வந்து சேர்ந்த மன்னவனாகிய இருதுபன்னனுக்குத் தேரோட்டியாய், வந்து, இப்போது சமையல் தொழில் புரிகின்ற வாகுகனே! எங்கள் தலைவனாகிய கொடைத் தொழிலை உடைய நளன் ஆவான்" என்று உரைத்தாள்.

உடனே வீமராசன், வேந்தர்கள் பலர் தன்னைச் சூழ்ந்து வர, வாகுகன் இருக்கும் இடத்தை அடைந்து, தன் அன்பு மகளாகிய தமயந்தியின் அன்புக்குரியவனாகிய அவனைக் கண்டான். ஆனால் நளனுடைய உண்மையான முந்தைய தோற்றத்தைக் காணமுடியாமல் திகைத்து நின்றான்.

வீமராசன், வாகுகனுடைய வாய்மொழிக்கும், அவனுடைய செயல்களுக்கும், எண்ணத்திற்கும் பொருந்தாமல் உள்ளது, அவன் கொண்டிருந்த தோற்றம் என்று நினைத்து,

Scanned by CamScanner

உண்மை அறிதற் பொருட்டு எல்லா வழிகளையும் ஆராய்ந்து, இறுதியாக வாகுகனு உரையாடி, அவனுடைய நுட்பமான பேச்சுத் திறத்தால் அவன் நளனே என்பதை அறி கொண்டான்.

பிறகு, வீமராசன் வாகுகனாகிய நளனிடம் "உண்மையை மறைக்காமல், உ உண்மையான உருவத்தை எங்களுக்குக் காட்டுவாயாக! என்றான். கலிபுருடனி வஞ்சனையால் அரசுரிமை இழந்த நளன், பாம்புகளுக்கு அரசனாகிய கார்க்கோடன் தன முன்பு கொடுத்திருந்த ஆடைகளில் ஒன்றை எடுத்துத் தன் இடையில் உடுத் கொண்டான். மற்றொன்றை மேலே போர்த்திக்கொண்டான்.

முன்பு நளன், காட்டில் தனியே சென்ற போது, தீ வாய்ப்பட்டு வருந் கார்க்கோடகன் என்னும் பாம்பைத் தீயினின்றும் காத்தான். ஆனால், அப்பாம்பு அவனை தீண்ட, நளனுடைய உருவம் மாறியது. அப்போது, அப்பாம்பு நளனுடைய நன்மைக்கே தா அவனைக் கடித்து அவன் உருவம் மாறும்படி செய்ததாகவும்; கலி நீங்கும் காலத்தில் தா கொடுக்கும் இரண்டு ஆடைகளில் ஒன்றை உடுத்து, மற்றொன்றைப் போர்த்தி கொண்டால் அவனுடைய பழைய உருவம் வந்துவிடும் என்று சொல்லி இரண்டு ஆடைக அவனிடம் கொடுத்துச் சென்றது.

நளன் இப்பொழுது அவ்வாறே செய்ய, அவனுடைய முந்தைய உருவம் மீண்டு அவனுக்கு வந்தது. தமயந்தியை விட்டு நீங்கி, வேற்று வடிவத்துடன் மறைந்து வாழ் தேர்ப்பாகன் வடிவம், திருமாலின் உலகளந்த திருவடிகளைச் சரணமாகப் பற்றியவரி பாவங்கள் நீங்குவதைப் போல நீங்கிப் போயிற்று.

நளன் மகனான இந்திரசேனனும், மகளான இந்திரசேனையும், நளனை உண்மையா அரச வடிவத்திற் கண்டதும் மகிழ்ச்சியும், துக்கமும் ஒரு சேரக் கண்ணீர் விட்டு, அழு வணங்கினர்.

தமயந்தியும், முன்னே காட்டில் அறுபட்டுத் தன்னால் உடுத்திக் கொள்ளப்பட்டிரு பாதி ஆடையுடன், வழியும் கண்ணீரும், தன் மார்பில் பொருந்திய தூசும் விளங்க தோன்றத் தன் கணவன் நளன் பாதங்களில் விழுந்து வணங்கினாள். அப்போது நளனுடை கண்களில் கண்ணீர் பெருகியது.

அப்பொழுது, தேவர்கள் எல்லாப் பக்கங்களிலும் கூடி நின்று, இவ்வுலகில் வாழ்கி உத்தமர்களுள் இந்நளனைப் போன்றவர் யாரும் இல்லையென்று கூறிப் புகழ்ந்துரைத்துத் கைகளால், தேன் சொரியும் மலர் மாலைகள் அணிந்து விளங்கும் நளன் மேல் மலர் து வாழ்த்தினர்.

Scanned by CamScanner